வேண்டும். அவனுக்குப் பாதுகாப்பு கிடையாது. கன்ஸ்யூமர் புரொடக்ஷன் இருக்கிறது. ஆனால் பாதுகாப்பு புரொடியூசருக்குக் கிடையாது. அப்படியானால் யார் விவசாயத்திற்கு வருவார்கள். யார் விவசாயத்தை நம்பி மேற்கொள்வார்கள். எனவே அந்தத் தொழிலில் பாதுகாப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுத் துறையில் விகிதாசாரப்படி விலையேற்றம் இருக்க வேண்டும். உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு விலையேற்றம் அளிக்கவில்லையென்றால் அவனுக்கு லாபம் இருக்காது. எல்லா மட்டங்களிலும் இன்றைக்கு விலை உயர்ந்து கொண்டிருக்கிறது. அதைக் கொடுத்துத்தான் மக்கள் வாங்குகிறார்கள். இதற்கு மட்டும் ஏன் எசன்ஷியல் கமோடிடீஸ் ஆக்ட்? அது மற்றதற்கு ஏன் இல்லை? 3 கோடி பேர் சினிமாவை நாள்தோறும் பார்க்கிறார்கள். அது எசன்ஷியல் காமோடிடீஸ் இல்லையா? எனவே உற்பத்தியைப் பார்த்து விகிதாச்சார விலை உயர்வைப் பார்த்து, விவசாயப் பெருமக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க வேண்டும். தொழில் அதிபர்களைப் பாதுகாக்கின்றோம். அவர்கள் தங்களுடைய உற்பத்தி விலையை உயர்த்தும்போது பாதுகாக்கின்றோம். அவர்கள் போட்டதுதான் விலையாக இருக்கின்றது. அம்பாசிடர் கார் என்ன விலை? சைக்கிள் என்ன விலை சொல்கிறார்கள்? துணி என்ன விலை சொல்கிறார்கள்? அவைகளை எல்லாம் பணம் கொடுத்து வாங்குகிறோம். அதுபோல் இதற்கும் அந்த உரிமையை கொடுங்கள் என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி

(ஈ) போரறிஞர் அண்ணாவின் பேச்சுக்கள், கருத்துக்கள் அடங்கிய நூல் உறுப்பினர்களுக்கு வழங்கப் பெறுதல்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களின் அனுமதியோடு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைலர்: பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. இப்போது என்னுடைய அனுமதியோடு நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, உங்களின் இனிய அனுமதியோடு ஒரு இனிப்பான செய்தியை மன்றத்திற்கு அறிவித்து, செய்தித் துறை மூலமாக வெளியிடப்பட்ட ஒரு புத்தகத்தை அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கிட நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு,

1989 ஏப்ரல், 25] *(திரு. பொன். முத்துராமலிங்கம்)*

1987-ம் ஆண்டு செய்தித் துறை ஆணை எண். 76, நாள் 10-3-87 அன்று காலமெல்லாம் சுடர் விட்டுக்கொண்டிருந்கின்ற பேரொளி யாகத் திகழ்ந்து, இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பேரறிஞர் அண்ணாவினுடைய எழுத்து ஓவியங்கள், பேசிய கருத்துகள் இவற் றையெல்லாம்இன்றைக்குத்தொகுத்து அண்ணாவினுடைய கருத்து மணிகளை இணைத்து ஒன்றாக்கி, நாட்டு மக்களுக்கு வழங்கிட வேண்டுமென்கின்ற பணியினை மறைமலையான், இளஞ்செழி யன் ஆகியவர்களுக்கு வழங்கப்பட்டு அந்தப் புத்தகம் 1988, செப்டம்பர் திங்கள் அன்று முழுமை பெற்றிருந்தாலும் என்ன காரணத்தாலோ அது வெளியிடப்படாமல் இருந்தது. இப்போது எங்களின் அன்புத் தலைவரும், தமிழக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு இந்தப் புத்தகத்தை உங்கள் மூலமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கு, படித்துப் பயன் பெறுவதற்கு அனுமதி வழங்கிட வேண்டுமெனக் கேட்டு இந்தப் புத்தகத்தை உங்களுக்கும் வழங்கி, இந்தத் துறை மூலமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுடைய இந்த அன்பான நன்கொடையை ஏற்று அறிஞர் அண்ணா அவர்கள் எந்தெந்தப் பெருமக்களை எல்லாம் தன்னுடைய வாழ்நாளில் போற்றி இருக்கிறார்கள் என்ப தைத் தொகுத்துத் தந்திருக்கிற அந்தப் பெரு முயற்சியைப் பாராட்டி அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : கொஞ்ச நேரம் பேச அனுமதி யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பேச வேண்டாம். ஏற்கெனவே நேரம் ஆகிவிட்டது. பேச வேண்டாம்; உட்கா ருங்கள், அப்புறம் ,வழங்குவது தப்பு என்று ஆகிவிடும் (குறுக்கீடு) அதுபற்றி இன்னொரு நாளைக்கு வாய்ப்பு இருக்கும்போது பேசலாம். அடுத்து, திரு. பூவராகன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அது அவர்களுக்கு மட்டும் கொடுத்ததால் அவர்கள் ஏதாவது அந்தப் புத்தகம் பற்றிசொல்ல வேண்டுமென்று கருதுகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு போவைத் தலைவர் : இப்படி 234 உறுப்பினர் களுக்கும் வாய்ப்புக் கொடுத்தால் 234 பேரும் எழுந்து பேசினால் பெரிய குழப்பம் ஆகிவிடும்.

மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும்,
வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய சட்ட மன்றத்தில் வைக்கப்பட்டு இருக்கின்ற மானியக் கோரிக்கைகளிலே இரண்டு முக்கியமான